DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.171/2022**

**prosecution witness: Pw 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**A1, A2 present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.CC.No. /20

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மரிய விஜித்தா | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**28.02.2023**

முதல் விசாரணை:

1. நான் செம்மமடத்தில் வசித்து வருகிறேன். வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். அ்.சா.1 என் கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 13.08.2021-ம் தேதி பகல் 12.00 மணியளவில் வீட்டிலிருந்து விஷேசத்திற்கு சென்றுவிட்டு மதியம் 01.30 மணியளவில் வீட்டிற்கு வந்தோம். நான் கேட்டை திறந்து தலைவாசல் கதவை திறந்த போது கதவு உள்ளே பூட்டப்பட்டிருந்தது. பின் பக்கம் சென்று பார்த்த போது கதவு திறந்ததிருந்தது.

2. உள்ளே சென்று பார்த்த போது லேப்டாப் மற்றும் Redmi செல்போனை காணவில்லை. எனவே, காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். பின்னர் காணாமல் போன பொருட்களை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. போலீசார் என்னை விசாரிக்கும் போது எத்தனை மணி என்றால் 2, 3 மணி இருக்கும். வீட்டு சாவி யார் வசம் இருந்தது என்றால் வெளியில் பையில் வைத்துவிட்டு சென்றோம். முதன் முதலாக நானும், எனது மகளும் தான் வீட்டிற்கு சென்று கதவை திறந்தோம். தகவல் சொன்னவுடன் என் கணவர் உடனே வந்துவிட்டார்.புகார் கொடுக்க நான் என் கணவருடன் காவல் நிலையம் சென்றேன். புகாரை போலீசார் தான் எழுதினார்கள். எழுதாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஞாபகம் இல்லை.